# மாகாணக்கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## பயிற்சிப் பரீட்சை – 02

| இஸ்லாம் | க.பொ.த. சாதாரணதரம் 2024 (2023) |
|---|---|

### பகுதி-1

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
ii. இலக்கம் 1 - 40 வரையுள்ள வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள 1,2,3,4 எனும் விடைகளுள் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.
iii. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையின் இலக்கத்தின் மேல் புள்ளடியிடுக.

01) இஸ்லாமிய சொல் வழக்கில் ‘அல் அஹ்லாக்’ எனப்படுவது,
1. நல்லமல்கள் 2. நற்செயல்கள் 3. நற்பண்புகள் 4. யாவும் சரியானவை

02) ஒரு அடியானின் செல்வத்தின் மீதான கடமையாக அமைவது,
1. ஹஜ் 2. நோன்பு 3. ஸதகா 4. ஸகாத்

03) அதிகமான ஹதீஸ் உள்ளடக்கத்தைக் கொண்ட கிரந்தம்,
1. புகாரி 2. திர்மிதி 3. நஸாஈ 4. முஅத்தா

04) ஜாமிஉல் குர்ஆன் என்ற சிறப்புப் பெயருடைய கலீபா,
1. அபூ பக்கர் (ரழி) 2. உமர் (ரழி) 3. உஸ்மான் (ரழி) 4. அலி (ரழி)

05) ‘முஃஜிதாத்’ என்ற பதம் குறிப்பது,
1. யதார்த்தம் 2. நிதர்சணம் 3. அற்புதம் 4. தெளிவானது

06) ‘அஸ்ஸிஹாஹுஸ் ஸித்தா’ என்ற பதம் குறிப்பிடுவது,
1. குர்ஆன் 2. இஜ்மாஉ 3. கியாஸ் 4. ஆறு கிரந்தங்கள்

07) ஒரு முஸ்லிம் ஈமான் கொள்ளவேண்டிய பிரதான அம்சங்களின் எண்ணிக்கை,
1. இரண்டு 2. மூன்று 3. நான்கு 4. ஆறு

08) ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு செய்யவேண்டியவை,
1. ஹக்குல்லாஹ் 2. ஹக்குன் நப்ஸ் 3. ஹக்குல் இபாத் 4. ஹக்குல் ஜார்

09) ‘தஸ்கியா’ எனப்படுவது,
1. பேணுதல் 2. பற்றற்ற வாழ்வு 3. சுத்தம் செய்தல் 4. தூய எண்ணம்

10) வியாபாரம் தவிர்ந்த ஈஜாப் கபூல் இடம்பெறுகின்ற பிரிதொரு சந்தர்ப்பம்,
1. மக்கள் சந்திப்ப 2. கொடுக்கள் வாங்கள்
3. கைத்தொழில் நடவடிக்கை 4. திருமண உடன்படிக்கை

11) அஜ்னபியான ஆனுடன் ஒரு பெண் தனித்திருப்பது,
1. மக்றூஹ் 2. ஜாஇஸ் 3. ஹராம் 4. முஸ்தஹப்

12) இஸ்மத் என்ற பண்புக்குரியவர்கள்,
1. நபிமார்கள் 2. வெலிமார்கள் 3. அவ்லியாக்கள் 4. நல்லடியார்கள்

13) சட்டமூலாதாரங்களில் ‘வஹி கைருமத்லூ’ வில் அடங்குவது,
1. அல்குர்ஆன் 2. அல்ஹதீஸ் 3. அல்கியாஸ் 4. அல்உர்பு

kalvi.lk

14) நவீன சட்டப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இஸ்லாம் வகுத்துள்ள வழிமுறைகள்,

1. குத்பா 2. த.்.வா 3. ஸூராக்கள் 4. இஜ்திஹாத்

15) தொழுகையில் கட்டாயம் ஓதவேண்டிய ஓதல்களில் ஒன்று,

1. வஜ்ஜஹ்து 2. ஸுஜூதில் ஓதும் துஆ
3. ஸூரா பாத்திஹாவின் பின் ஓதும் துஆ 4. அத்தஹிய்யாத்

16) 'ரய்யான்' எனும் சுவன வாசலில் நுழையும் பாக்கியம் பெறுவோர்,

1. தொழுதோர் 2. ஸகாத் கொடுத்தோர் 3. நோன்பு நோற்றோர் 4. ஹஜ் செய்தோர்

17) ஸபா மர்வாக்கிடையில் ஸஈ செய்யும்போது நினைவூட்டப்படும் அம்மையாரின் பெயர்,

1. ஸாரா 2. ஹாஜரா 3. மர்யம் 4. ஆஸியா

18) உம்ராவில் இடம்பெறாத செயல்,

1. ஹல்க் 2. ஸஈ 3. அரபாவில் தரித்தல் 4. தவாப்

19) அல்லாஹ் அனுமதித்தவற்றுள் அவனுக்கு மிகவும் வெறுப்பானது,

1. நிகாஹ் 2. ஸுஹ்த் 3. தலாக் 4. இத்தா

20) ஸகாத் பெறத் தகுதியற்றோர்,

1. பகீர் 2. மிஸ்கீன் 3. ஆமில் 4. அஹ்லுல் பைத்

21) பொருத்தமான இணைப்பைக் கொண்ட தொகுதி

| | |
|---|---|
| 1. அஸ்ல் | A. கிளைப் பிரச்சினை |
| 2. பர்உ | B. பொதுத் தன்மை |
| 3. இல்லத் | C. தீர்வு |
| 4. ஹுக்ம் | D. அடிப்படை |

1. DACB 2. DBAC 3. DABC 4. ABCD

22) இஸ்லாமிய ஆட்சியில் மூன்றாவது கலீபாவாக பதவியேற்றவர்,

1. அபூபக்கர் (ரழி) 2. உஸ்மான் (ரழி) 3. அலி (ரழி) 4. உமர் (ரழி)

23) ஆலிமுல் குரைஷ் எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் இமாம்,

1. இமாம் அபூஹனீபா (ரஹ்) 2. இமாம் மாலிக் (ரஹ்)
3. இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் (ரஹ்) 4. இமாம் ஷாபிஈ (ரஹ்)

24) தலாக் சொல்லப்பட்ட பெண்ணின் இத்தாக் காலம்,

1. மூன்று சுத்த காலம் 2. நான்கு மாதமும் பத்து நாற்கள்
3. பிரசவம் வரை 4. 40 நாற்கள்

25) பூமியை வளப்படுத்தும் பணி

1. இமாரத் 2. ரிஸாலத் 3. கிலாபத் 4. இபாதத்

26) முவத்தா எனும் நூலின் ஆசிரியர்,

1. இமாம் மாலிக்(ரஹ்) 2. இமாம் ஷாபிஈ(ரஹ்)
3. இமாம் அபூஹனீபா(ரஹ்) 4. இமாம் அஹ்மத்(ரஹ்)

27) 'கத்காமதிஸ் ஸலாஹ்' எனும் செற்றொடர் கூறப்படுவது,

1. அதானில் 2. தொழுகையில் 3. இகாமத்தில் 4. ஸுபஹ் அதானில்

28) சுய விசாரணையைக் குறிக்கம் சொல்,

1. முஹாஸபா 2. அர்ரிழா 3. ஸப்ர் 4. மஹப்பத்

29) தக்பீர் தஹ்ரீமா என்பது,

1. அல்லாஹு அக்பர் 2. தொழுகையின் முதல் தக்பீர்
3. ஹஜ்ஜில் ஓதப்படும் தல்பியா 4. நபியவர்களால் நாளாந்தம் ஓதப்படும் துஆ

30) திருமணத்தில் ஈஜாப் கபூல் இரண்டும் தொடர்புபடுவது,

1. காழி – வலி 2. மணமகன் – மணமகள் 3. மணமகள் - காழி 4. வலி – மணமகன்

31) தரம் 11 மாணவர்கள் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு லுஹருடைய தொழுகையை அஸருடைய நேரத்தில் தொழுவோம் என முடிவெடுத்தனர். இவர்கள் தொழுத முறை,

1. ஜம்உ 2. கஸ்ரு 3. ஜம்உ தக்தீம் 4. ஜம்உ த.்.கீர்

32) காதமுன் நபிய்யீன் என்பதன் சரியான கருத்து,

1. நபிமார்களில் மேன்மையானவர் 2. நபிமார்களில் சிறந்தவர்
3. நபிமார்களில் உயர்ந்தவர் 4. நபிமார்களில் இறுதியானவர்

33) இஸ்லாத்தை விட்டும் நீங்கியவர்,

1. மு.்.மின் 2. முஷ்ரிக் 3. முர்தத் 4. முனாபிக்

34) ஸகாத் வசூலித்து விநியோகிப்பவர்,

1. முஅல்லபதுல் குலூப் 2. ஆமில் 3. பகீர் 4. பீஸபீலில்லாஹ்

35) பின்வருவனவற்றுள் இலகுவான நஜீஸ்,

1. தாய்ப்பால் மட்டும் அருந்தும் ஆண் குழந்தையின் சிறுநீர்
2. உடலிலிருந்து வெளியேரும் இரத்தம்
3. வீட்டில் வளர்க்கப்படும் நாயின் உமிழ் நீர்
4. தூக்கத்தில் வெளிப்படும் வீணீர்

36) ஹஜ்ஜில் இறுதியாக நிறைவேற்றப்படும் தவாப்,

1. தவாபுல் குதூம் 2. தவாபுல் இபாழா 3. தவாபுல் விதா 4. தவாபுஸ் ஸியாரா

37) பைரூஸ் தைலமி என்ற ஸஹாபியால் கொல்லப்பட்ட போலி நபிகளில் ஒருவர்

1. முஸைலமா 2. அஸ்வதுல் அன்ஸி 3. ஸஜா 4. துலைஹா

38) கலீபா உமர் (ரழி) ற்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையில் இடம்பெற்ற உமர் ஷாசனம் எங்கு கைச்சாத்திடப்பட்டது?

1. மதீனா 2. குத்ஸ் 3. குபா 4. கைரவான்

39) முஸ்லிம்களின் முதலாவது கிப்லா,

1. மஸ்ஜிதுல் ஹராம் 2. க.்.பதுல்லாஹ் 3. மஸ்ஜிதுல் அக்ஸா 4. மஸ்ஜிதுல் குபா

40) பொருத்தமான இணைப்பைக் கொண்ட தொகுதி

| | |
|---|---|
| 1. ரிபா | A. சுத்தம் |
| 2. பிக்ஹு | B. நம்பிக்கை |
| 3. அகீதா | C. மார்க்க சட்டம் |
| 4. தஹாரா | D. வட்டி |

1. DCAB 2. DCBA 3. ABCD 4. DBCA

(1X40= 40)

***

kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page